**IN THE COURT OF SUB COURT, USILAMPATTI**

**O.S. No. 191/ 2023**

**Dated: 21.07.2026**

Name : **குணசேகரபாண்டியன்** (PW2)

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

எனது பெயர் குணசேகரபாண்டியன். வாதி செந்தில்விநாயகம் சொல்லி சாட்சி அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நிரூபணவாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். நானும் வாதியும் ADMK கட்சி உறுப்பினர் என்றால் சரிதான். அதனால் வாதிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியில்லை. நிரூபணவாக்குமூலம் பத்தி 2ல் Promisary noteஐ நான் தான் நிரப்பி உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புரோநோட்டில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். புரோநோட் எழுதியர் சாட்சி கையெழுத்து போட முடியாது என்றால் சரியில்லை. வாதி தரப்பு சாட்சி ராமராஜ் நீதிமன்றத்திற்கு வரவில்லை. வாதி வழக்கறிஞர் என்றாலும் அதன் தனது குறுக்கு விசாரணையில் பணத்தை தானே எண்ணி பார்த்து ரூ.500 நோட்டுகளாக கொடுத்ததாகவும் பணம் கொடுத்தபோது சாட்சிகள் இருந்ததாகவும் அந்த சாட்சிகளை பிரதிவாதி அழைத்து வந்ததாகவும் சொல்லி உள்ளார் என்றால் சரிதான். வாதி தரப்பு சாட்சி யாரும் இல்லை என்று வாதி சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அதைப் பற்றி தெரியாது. 20.05.2021 ரூ.5 லட்சம் பணம் கொடுத்த போது நான் இருந்தேன். பிரதிவாதி பணம் வாங்கி கொண்டு கையெழுத்து செய்ததை நான் பார்த்தேன். வா.சா.ஆ.3 ஆதார் அட்டை என்னுடையது தான். வாதி தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.192/2023 வழக்கு உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி அந்த வழக்கில் என்னை

சாட்சியாக அழைத்தால் நான் வருவேனா என்றால் தெரியாது. இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் வாதி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் வாதிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியில்லை.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

L MAHESWARI

Digitally signed by L MAHESWARI
Date: 2026.07.21 10:19:35 +0530

Sub Judge,
Usilampatti.